நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.58 /2023
அரசு தரப்புக்காக அ. சா.1 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 1 | | | |

1, 4 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 2, 3 எதிரிகள் ஆஜரில் இல்லை மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day of November 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 02.57)

நான் தற்போது புவனகிரி தாலுக்கா பூதவராயன்பேட்டை என்னும் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எனது மனைவி வீட்டை நிர்வாகம் செய்து வருகிறார். எனக்கு 3 மகள்கள், ஒரு மகன். வழக்கில் இறந்துபோன கல்பனா எனது 2–வது மகள். ஆஜர் 1, 4 எதிரிகளை எனக்கு தெரியும். 2–ம் எதிரியும் 3–ம் எதிரியும் முதல் எதிரியின் தந்தையின் மனைவிகள் ஆவர். எனது இரண்டாவது மகள் கல்பனா குறிஞ்சிப்பாடியில் உள்ள திருவள்ளுவர் கல்லூரியில் பி.ஏ மூன்றாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தபோது ஆஜர் முதல் எதிரியும் அதே கல்லூரியில் படித்துவந்தார். ஆஜர் முதல் எதிரியும் எனது மகள் கல்பனாவும் காதலித்து வந்தனர். எங்களிடம் சொல்லாமல் இருவரும் 2017

ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டார்கள். திருமணத்திற்கு பிறகு முதல் எதிரியின் வீட்டில் எனது மகள் வசித்து வந்தார். பிறகு இரண்டு வருடங்களுக்கு பிறகு எனது மகள் எனது அம்மா இறந்த தகவல் அறிந்து எங்கள் வீட்டிற்கு வந்தார். மறுநாள் எனது மகள் முதல் எதிரியின் வீட்டிற்கு சென்று விட்டார். 05.09.2022 ஆம் தேதி ஆஜர் எதிரியின் ஊரில் இருந்து ஜெயவள்ளி என்பவர் எனது மகள் பிரியங்காவிற்கு போன் செய்து எனது மகள் தற்கொலை செய்து கொண்டதாக சொன்னார். பிறகு எனது மகள் பிரியங்கா என்னிடம் தகவல் சொன்னார். நானும் எனது உறவினர்களும் ஆஜர் முதல் எதிரியின் வீட்டிற்கு சென்றோம். நாங்கள் செல்வதற்குள் போலிசார் என் மகளின் பிரேதத்தை மருத்துவமனைக்கு எடுத்து சென்று விட்டனர். என்னுடைய மகள் ஏன் தற்கொலை செய்து கொண்டார் என்று நான் விசாரித்தேன். யாரும் காரணம் தெரியவில்லை என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் எனது மகளை பார்க்கபோனபோது முத்தாண்டிக்குப்பம் போலிசார் 1–ம் எதிரி கலைவாணன் வீட்டிற்கு போனால் பிரச்சனை வரும் என்று சொல்லி முத்தாண்டிக்குப்பம் காவல்நிலையத்தில் நிற்க வைத்தார்கள். எனது மகள் இறந்ததற்காக கையெழுத்து போட வேண்டும் என்று சொன்னார்கள். வெள்ளைத்தாளில் நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் போலிசார் எதுவும் படித்து காண்பிக்கவில்லை. போலிசுக்கு பயந்து கையெழுத்து போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (அந்த புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முழுமையாக ஆதரவு அளிக்காத நிலையில் ஏற்கனவே போலீசார் விசாரணையில் விசாரித்த போது கூறியிருப்பதை மறுத்துள்ள நிலையில் இந்த சாட்சியிடம் அரசு தரப்பு வழக்கை எடுத்துரைத்து மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய இந்திய சாட்சி சட்டப்பிரிவு 154ன் கீழ் அனுமதி கோரினார். இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை–</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அவ்வாறு விசாரித்தபோது நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றும் எனக்கு திருமணமாகி மூன்று மகள்களும் ஒரு மகனும் உள்ளார்கள் என்றும் என் மனைவி பெயர் உமா என்றும் என் மனைவிக்கு சொந்த ஊர் கேரளா மாநிலம் எனது மூத்த மகள் புவனா என்பவரை வத்தவராயன்தெத்து கிராமத்தில் சரவணன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றும் என் இரண்டாவது மகள் பெயர் கல்பனா மூன்றாவது மகள் பெயர் பிரியங்கா என்றும் என் கடைசி மகன் பெயர் சுரேந்தர் என்றும் என் இரண்டாவது மகள் கல்பனா வயது 23 என்பவர் குறிஞ்சிப்பாடி திருவள்ளுவர் கலைக்கல்லூரியில் B.A (தமிழ்) இரண்டாம் ஆண்டு படித்து வந்தார் என்றும் அப்போது எனது மகள் கல்பனா முத்தாண்டிகுப்பத்தை சேர்ந்த காசிநாதன் மகன் கலைவாணன் என்பவரை காதலித்து வந்தார் என்றும் அவர் காதலிப்பது எங்களுக்கு தெரியவந்தது என்றும் அப்போது நான் என் மகளிடம் படிப்பு முடியட்டும் என்று கூறினேன் என்றும் அதற்குள் எனது மகள் கல்பனா 09.06.2017 அன்று எனது வீட்டை விட்டு வெளியேறி கலைவாணன் உடன் சென்று பேர்பெரியாங்குப்பம் அனந்தீஸ்வரர் கோவிலில் திருமணம் செய்து கொண்டார்கள் என்றும் இந்த திருமணம் எனக்கு ஒரு வருடம் கழித்துதான் தெரியவந்தது என்றும் பிறகு எனது மகளும், மருமகனும் எனது வீட்டிற்கு வந்தார்கள் என்றும் அப்போது எனது மருமகனும், மகளும் என்னிடம் 5 பவுன் நகையும், 1 லட்சம் பணமும் கேட்டார்கள் என்றும் அதற்கு நான் என்னிடம் உள்ள நிலத்தை போக்கியம் வைத்து 80,000 ரூபாய் கொடுத்தேன் என்றும் பிறகு ஒரு வருடம் கழித்து மீண்டும் வீட்டிற்கு வந்து எனது மகள் நகையும், பணமும் கேட்டார்கள் அதற்கு நான் இப்பொழுது இல்லை மெதுவாக செய்கிறேன் என்று சொல்லி அனுப்பினேன் என்றும் அதன்பிறகு ஒரு வருடம் கழித்து 2019 ஆம் ஆண்டில் என் மகளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றும் பிறகு என் மகள் எங்கள் வீட்டிற்கு மீண்டும் வந்து தன் கணவர் மற்றும் மாமியார் நகையும், பணமும் கேட்டு என்னை அடிக்கிறார்கள் என்று எனது மகள் என்னிடம் சொல்லி அழுதார் என்றும்

நான் பணம் தருகிறேன் என்று சொல்லி அனுப்பினேன் என்றும் அதன் பிறகு என் மகள் கல்பனா எனக்கு போன் செய்து எனது கணவர் இரண்டாவது திருமணம் செய்ய போகிறோம் என்று அடிக்கிறார் என்றும் நீங்கள் பணம் தாருங்கள் என்று கூறியது என்றும் மேலும் எனது மூத்த மகள் புவனாவிடம் கல்பனா போன் செய்து தான் முத்தாண்டிக்குப்பத்தில் முந்திரி கொட்டை உடைத்து சம்பாதித்து தன் பிள்ளையை காப்பாற்றி வருவதாகவும் தன் கணவர் தனக்கு ஏதுவும் செய்வதில்லை என்றும் தானும் தன் பிள்ளையும் கூரை வீட்டில் தனியாக உள்ளதாகவும் தன்னுடைய சம்பாதியத்தில் தான் பிழைத்து வருவதாகவும் தன்னை தன் கணவரும் மாமியார் ஜோதிமதியும், தன் பெரிய மாமியார் காந்திமதியும் தன் கணவருக்கு இரண்டாவது திருமணம் செய்ய போவதாகவும் தன்னை மொட்டநாயே ஒன்னும் இல்லாமல் வந்தவள்தானே நீ ஏன் இங்கு இருக்கிறாய் எங்கேயாவது போய் தொலை என்று சொல்லி மூவரும் தன்னை அடிக்கிறார்கள் என்றும் அதனால் அப்பா அம்மாவிடம் சொல்லி கொஞ்சம் பணம் கொடுங்கள் என்று தன்னிடம் சொல்வதாக அடிக்கடி சொல்வாள் என்றும் இந்நிலையில் எனது மகள் 25.08.2021 ந் தேதி காலை 11.00 மணியளவில் புவனகிரி பங்களா பேருந்து நிறுத்ததிற்கு வந்து எனக்கு போன் செய்து பணம் தேவை என்று கூறியது என்றும் நான் பங்களா பேருந்து நிலையத்திற்கு சென்று என் மகளை பார்த்து என் கையில் இருந்த பணம் ரூ.2500/- ஐ கொடுத்து அனுப்பினேன் என்றும் அதன் பிறகு எனது மகள் போன் செய்யவில்லை என்றும் பிறகு 05.09.2021 ந் தேதி காலை 09.00 மணிக்கு எனது மூன்றாவது மகள் பிரியங்கா போன் செய்து முத்தாண்டிக்குப்பம் மேலத்தெருவில் கூரை வீட்டில் கல்பனா தூக்குமாட்டிக்கொண்டதாக முத்தாண்டிகுப்பத்தில் இருந்து போன் வந்தது என்று கூறினாள் என்றும் உடனே நானும் என் குடும்பத்தாரும் முத்தாண்டிக்குப்பம் வந்து பார்த்தபோது எனது மகள் பிரேதம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரியவந்தது என்றும் எனது மகள் கல்பனாவின் இறப்பில் சந்தேகம் உள்ளது என்றும் எனவே எனது மகள் இறப்பிற்கு காரணமான அவரது கணவர் கலைவாணன் மற்றும் மாமியார் மீது நடவடிக்கை எடுக்கும்படி 05.09.2021 ஆம் தேதி 12.00 மணிக்கு

முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்த பிறகு இது சம்மந்தமாக பண்ருட்டி DSP அய்யா விசாரித்தார் என்றும் ஆர்டிஓ விசாரித்தார் என்றும் நான் நடந்ததை சொன்னேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகி போய் விட்டதால் அவர்களை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக நடந்த விவரங்களை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

டிஎஸ்பி மற்றும் ஆர்டிஓ ஆகியோர் என்னை விசாரித்தபோது நான் முதல்விசாரணையில் சொன்னபடி என் மகள் தற்கொலை செய்து கொண்டு இறந்ததற்கான காரணம் தெரியவில்லை என்று தான் சொன்னேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 03.20 )

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.